**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Civil Procedure)**

**அசல் வழக்கு எண். 241/2024**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08ம் நாள் வா.த.சா. 1. எல்லம்மாள் அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | எல்லம்மாள் | வயது | : | |
| க/பெ. | : | சொக்கலிங்கம் | இனம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| சமயம் | : | | தாலுக்கா | : | |

**வா.த.சா. 1 /(PW1)- முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். (வாதியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது). வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் சத்திய பிரமாண வாக்குமூலத்தினை ஏற்று தீர்ப்பு செய்ய வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

| வ. எண் | Exhibits | | தேதி | ஆவணங்கள் விவரம் | அசல் /நகல் |
|---|---|---|---|---|---|
| 1 | வா.த.சா.ஆ.1 | Ex A-1 | 30.06.2016 | எனது தாத்தா மாணிக்க ஆச்சாரி என்பவரின் இறப்பு சான்றிதழ். | உண்மை நகலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | வா.த.சா.ஆ.2 | Ex A-2 | 03.01.2024 | எனது பாட்டி திரிபுரசுந்தரியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | வா.த.சா.ஆ.3 | Ex A-3 | 15.09.2023 | எனது தாத்தா சின்னசாமி ஆச்சாரி என்பவரின் இறப்பு சான்றிதழ். | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | வா.த.சா.ஆ.4 | Ex A-4 | 16.02.2023 | எனது பாட்டி குப்பம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | வா.த.சா.ஆ.5 | Ex A-5 | 04.05.2018 | எனது தந்தை குமாரசாமி ஆச்சாரி என்பவரின் இறப்பு சான்றிதழ். | உண்மை நகலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | வா.த.சா.ஆ.6 | Ex A-6 | 15.09.2023 | எனது பாட்டி ருக்குமணியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | வா.த.சா.ஆ.7 | Ex A-7 | 13.06.2023 | எனது தாயார் பாப்பாத்தியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ். | பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| 8 | வா.த.சா.ஆ.8 | Ex A-8 | 30.12.2023 | எனது அண்ணன் முனுசாமி ஆச்சாரி என்பவரின் என்பவரின் இறப்பு சான்றிதழ். | பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| 9 | வா.த.சா.ஆ.9 | Ex A-9 | 03.10.2023 | எனது அண்ணி ஜகதாம்மாள் என்பவரின் என்பவரின் இறப்பு சான்றிதழ். | பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| 10 | வா.த.சா.ஆ.10 | Ex A-10 | 24.05.2024 | எனது அண்ணன் முனுசாமி ஆச்சாரி என்பவரின் என்பவரின் வாரிசு உரிமை சான்றிதழ். | பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| 11 | வா.த.சா.ஆ.11 | Ex A-11 | 07.06.2024 | எனது தாத்தா குமாரசாமி ஆச்சாரி என்பவரின் வாரிசு உரிமை சான்றிதழ். | பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| 12 | வா.த.சா.ஆ.12 | Ex A-12 | 29.09.2024 | எனது தாத்தா மாணிக்க ஆச்சாரி என்பவரின் வாரிசு உரிமை சான்றிதழ். | பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| 13 | வா.த.சா.ஆ.13 | Ex A-13 | 03.10.2024 | நான் 1ம் பிரதிவாதியிடம் சின்னசாமி ஆச்சாரி என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கோரிய மனு ஒப்புகை சீட்டு. | பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| 14 | வா.த.சா.ஆ.14 | Ex A-14 | | சின்னசாமி ஆச்சாரி என்பவரின் Genelogy tree. | |
| 15 | வா.த.சா.ஆ.15 | Ex A-15 | | எனது குடும்ப அட்டை. | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |
| 16 | வா.த.சா.ஆ.16 | Ex A-16 | | எனது ஆதார் அட்டை. | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | வா.த.சா.ஆ.17 | Ex A-17 | | 2ம் வாதியின் ஆதார் அட்டை. | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |

**குறுக்கு விசாணை**

1) மாணிக்க ஆச்சாரி மற்றும் சின்னசாமி ஆச்சாரிக்கு என்ன உறவு முறை என்றால் அவர்கள் அண்ணன் தம்பி உறவு முறை. மாணிக்க ஆச்சாரி எனது தந்தை வழி தாத்தா, சின்னசாமி ஆச்சாரி மாணிக்க ஆச்சாரியின் தம்பி ஆவார். சின்னசாமி ஆச்சாரிக்கு பிள்ளைகள் என்றால் சரிதான். அவருக்கு இரண்டு மனைவிகள். குழந்தைகள் இல்லை. மாணிக்க ஆச்சாரிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகன் எனது தந்தை குமாரசாமி ஆச்சாரி ஆவார்.

2) எனது தந்தை குமாரசாமிக்கு நானும், எனது அண்ணன் முனுசாமி மட்டும் தான் பிள்ளைகள் ஆகும். எனது தாத்தா சின்னசாமிக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் இந்து குடும்பம் என்றால் சரிதான். இந்து வாரிசு உரிமை சட்டப்படி சின்னசாமி ஆச்சாரிக்கு வாரிசாக குமாரசாமி என்பவர் மட்டும் தான் வருவார் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளாக நாங்கள் உள்ளோம். நான் 2ம் நிலை வாரிசுகளாக இறந்து போன சின்னசாமிக்கு வாரிசு கோர முடியாது என்றாலும், எனது தாத்தாவின் உடன்பிறப்பான சின்னாசாமிக்கு உடன்பிறப்பு அடிப்படையில் நான் வாரிசு சான்றிதழ் கேட்க முடியும் என்றால் சரியல்ல.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. I. Vino,
District Munsif,
Sriperumbudur.